# மனனப் பகுதி - தரம் 11

## திருவிவிலியப் பகுதி

1. ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர், நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர். (திருப்பாடல் 103:8)
2. ஆண்டவருக்குப் புகழ்ப்பா அமைத்துப் பாடுங்கள், ஏனெனில் அவர் மாட்சியுறும் செயல்களைப் புரிந்துள்ளார், அனைத்துலகும் இதை அறிந்துகொள்வதாக. (எசாயா 12:5)
3. எனவே, நான் உனக்குக் கூறுகிறேன், உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. (மத்தேயு 16:8)
4. அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் மருள வேண்டாம். (யோவான் 14:27)
5. உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" என்றார். (தொடக்க நூல் 3:15)
6. உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன் உன்னைச் சபிப்போரை நானும் சபிப்பேன் உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்றார். (தொடக்க நூல் 12:3)
7. எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள். (வி.ப. 19:6)
8. அவரே நம் மீட்பை உறுதிப்படுத்தும் அடையாளமாகத் தூய ஆவியை நம் உள்ளத்தில் பொழிந்து நம்மீது தம் முத்திரையைப் பதித்தார். (2கொரி. 1:22)

## நிசேயா நம்பிக்கை அறிக்கை

9. வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பளிக்க மாட்சியுடன் மீண்டும் வரவிருக்கின்றார். அவரது ஆட்சிக்கு முடிவு இராது. பகுதி – (8)
10. தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும் ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான தூய ஆவியாரை நம்புகிறேன். பகுதி – (9)